Uva Wellassa University

தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகமானது தேசிய வளங்களை மையப்படுத்தி அவற்றுக்கு மேலதிக மதிப்பைக் கொடுத்துக் கல்விச் செயற்பாட்டை முன்கொண்டு செல்வதுடன் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பவற்றில் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. இப்பல்கலைக்கழகக் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய ரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்துவராகலாம்.

# ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்

## மாணவர் அனுமதிகள்
## கல்வியாண்டு 2017/2018

# உளச்சார்புப் பரீட்சை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி 2017/2018 கையேட்டின் பிரிவு 1.2 இன்படி, ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத்திற்கு 2017/2018 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக அனுமதிக்காக பின்வரும் பட்டப்பயில்நெறிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிப்பவர்கள் மற்றைய தகைமைகளுடன் இவ் உளச்சார்புப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

- கணணி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
- முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

இப்பரீட்சை விண்ணப்பித்த கற்கைநெறிக்கேற்ற உளச்சார்பினைப் பரீட்சிப்பதற்கான வினாத்தாளைக் கொண்டிருக்கும்.

விண்ணப்பதாரிகள் இப்பல்கலைக்கழகத்தின் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதிக்கான மாணவர் கையேடு 2017/2018 இன் பிரிவுகள் 2.2.8.15, 2.2.8.16, 2.2.8.18, 2.2.8.21 ஆகியவற்றை பார்வையிடும்படி வேண்டப்படுகின்றனர்.
இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எமது இணையத்தளத்திலிருந்து (www.uwu.ac.lk) தரவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலுறையிலிட்டு சிரேஸ்ட உதவிப் பதிவாளர், பரீட்சைகள் பிரிவு, ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை எனும் முகவரிக்கு 19.02.2018 அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உளச்சார்புப் பரீட்சை 2017/2018 எனக்குறிப்பிடவும். பின்வரும் ஆவணங்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

i. ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுளைக் கிளையின் கணக்கிலக்கம் 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவது கிளையில் ஒரு பரீட்சைத்தாளுக்கு ரூ.300/- வீதப்படி வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு (பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்திருக்கவும்). இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

ii. க.பொ.த(உ.த) 2017 பரீட்சைப் பெறுபேற்றின் நிழற்பிரதி ஒன்று

iii. தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி ஒன்று

உளச்சார்புப் பரீட்சை 24.03.2018 (சனிக்கிழமை) ஆங்கில மொழிமூலம் மாத்திரமே நடாத்தப்படும். அனுமதி அட்டைகள் தபால்மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

உளச்சார்புப் பரீட்சை விபரம் மற்றும் தரவிறக்கம் செய்யக்கூடிய விண்ணப்பப் படிவம் போன்றவை www.uwu.ac.lk எனும் இணையத்தளத்திலும் கிடைக்கப்பெறும்.

ஒவ்வொரு பரீட்சைத் தாளுக்குமான விண்ணப்பங்களை வெவ்வேறாக அனுப்பவேண்டாம் என விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்படுகின்றனர். தயவுகூர்ந்து விண்ணப்பிக்கும் எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சைத் தாள் விண்ணப்பங்களையும் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சார்த்தியின் அதிமுன்னுரிமை விருப்பு வழங்கிய பரீட்சைத் தாளுக்கு அமையவே கவனத்திற்கொள்ளப்படும். உளச்சார்புப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்கான இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. தங்களுக்கான பரீட்சை நிலையத்தினை இவ்வட்டவணையிலிருந்து தெரிவு செய்யவும்.

| Centre | Centre No. |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அனுராதபுரம் | 06 |

விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்த பரீட்சை நிலையங்கள் சிலநேரங்களில் ஒதுக்கப்படமுடியாது போயின் மாற்றீடாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

பதிவாளர்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
பசறை வீதி
பதுளை
16.01.2018

**T.P. : 055-2226622**
**Fax : 055-2226633**
**Web site : www.uwu.ac.lk**